முருகப்பெருமான் துணை

**மகான் பரத்துவாசர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

05.10.2021, செவ்வாய்கிழமை

1. வடிவேலன் மகா சக்தியாக
வாழுகின்ற ஞானியே அரங்கா
தேடி உன் ஆசி பெறும் மக்கள்
திருவருள் பெற்று வாழ்வரெனக் கூறி
2. கூறியே துல்லிய ஆசிதனை
குறைவிலா பிலவ தரிவை திங்கள்
தெரிவிக்க மூவாறோர் திகதி குசன் வாரம்
(பிலவ வருடம் புரட்டாசி மாதம் 19ம் நாள், 05.10.2021 செவ்வாய்கிழமை)
தேசிகன் கேட்க பரத்துவாசர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உலக மக்கள் ஞானியர் காட்டும்
ஞானவழி ஏற்றுத் தொடரவே
ஞானவான்கள் எனும் மாற்றம் உருவாகி
4. ஆகியே மக்களிடை ஞானசக்தி
அரங்கன் சக்தியாகப் பரவி
மகிழும்படியான சமூக மாற்றம்
மனிதநேயமிக்கச் சூழலாகி
5. ஆகியே அகிலம் தானும்
அமைதி பாதுகாப்பு மிக்க
அகிலமதில் ஞானிகள் தலைமை
ஆளுமை கொண்ட பூமியாக
6. ஆகவே இந்த லோகம் மாறி
அற்புதமான ஞானிகள் ஆட்சி
யுகமாற்றமாகக் கண்டடையும்
உண்மை ஞானம் சன்மார்க்க வழியில்
7. வழியில் தந்தருளும் ஞானி
வழிமுறைகளை ஏற்றுமே
அழியாமை தரும் தருமவழியான
அறத்தின் பாதை அகலா தொடர
8. தொடரவே எங்கும் தருமம்
தெய்வ பலமாக மாறி
இடரை பேரிடரை வென்று
யுகமக்களை காத்திட நேரும்

9. நேருமை கொண்ட மக்களாய்
நிலவுலகோர் வாழ்வில் சிறந்து
தருமம் காத்து வளர்த்திட
தரணியே இயற்கை வளம்கூடி

10. கூடியே பிறவழி இன்னல்வாரா
குறிப்பாக இயற்கை சீற்றமிலா
பேரிடர் பிரளயத் துன்பமில்லா
புகலுவேன் சர்வபாதுகாப்பும் கொண்ட

11. கொண்ட ஞான பூமியாக
குவலயம் அரங்கன் தயவால்
உண்டாகும் சடுதி மாற்றம்
உரைத்திட்ட துல்லிய ஆசி முற்றே

–சுபம்–